எண்.33-1/கா.ந/வருவாய்/2020-21
காரைக்கால் நகராட்சி
****

தேதி:28-10-2020

# செய்திக்குறிப்பு

புதுச்சேரி அரசு உள்ளாட்சித்துறை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்து வரியை கணினி மயமாக்கியதைப் போலவே (Online Property Tax System) தொழில் உரிமங்களையும் கணினி மயமாக்குவதற்கான தொழில் நுட்ப கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு அனைத்து தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக மையங்கள் தங்களது தொழிலுக்கான உரிமத்தை உள்ளாட்சி அமைப்புகளிடம் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது. ஆகவே, இவற்றை ஒழுங்கு முறைபடுத்த காரைக்கால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் தொழில் உரிமங்கள் தொடர்பான தகவல்கள் உடனடியாக அரசுக்கு அனுப்பப்பட வேண்டி உள்ளது. காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்டப் பகுதிகளில் தற்போதுவரை சுமார் 3000 வணிக உரிமங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. இது தொடர்பான தற்போதைய கள ஆய்வில் பல்வேறு காரணங்களால் வணிகர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் உரிமம் பெறாமலேயே/ உரிமம் புதுப்பிக்கப்படாமலேயே இயங்குகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் கோவில் மற்றும் சமய நிறுவனங்களின் இடங்களில், பொதுப்பணித்துறை, உள்ளாட்சித்துறை, குடிசைமாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் போன்ற இடங்களில், சாக்கடைகள் மற்றும் கால்வாய்களை ஆக்கிரமிப்பு செய்து ஏராளமான வணிக நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்றும் அவை பல்வேறு காரணங்களால் உரிமம் பெறப்படாமல்/புதுப்பிக்கப்படாமல் இருப்பதும் புலனாகிறது. ஆகவே, காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் தொழில் செய்யும் இத்தகைய வணிக பெருமக்கள் தாங்களாகவே முன்வந்து தங்களுக்கான தொழில் உரிமத்தை பெற்றிடவும், அவற்றை புதுப்பித்துக் கொள்ளவும் 15 நாட்களுக்குள் நகராட்சியை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT. OF PUDUCHERRY * DEPT. OF INFORMATION & PUBLICITY, KARAIKAL

ஆணையர்

பெறுநர்:

1. உதவி இயக்குனர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, காரைக்கால்.